இறையரசு மலர

"அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" யோவான் 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

**(FOR PRIVATE CIRCULATION ONLY)**

**Vol. 10 OCTOBER - 2014 No. 10**

Dear Fathers, Brothers and Sisters in Jesus Christ,

May the Blessings of our Lady of Rosary be with you all. Let the devotion of recitation of the Holy Rosary continue to strengthen our faith and renew our commitment in the ministry of evangelization.

The death of our Fr. A. Joseph has caused lot of sorrow for our diocese and his family. He has been suffering very much for the past few years. It is our privilege to continue to pray for the repose of his soul and for his family especially his Mother. We thank her for the gift of his son to our diocese. I take this opportunity to thank the German Hospital at Chetpet, CMC and Fr.Samuel. I would like to remind all our priests to offer a Holy Mass for his soul.

The feast of our Lady of Victory had become the feast of our Lady of the Most Holy Rosary in 1571 after the victory at the Battle of Lepanto. But even after many centuries it is still relevant to the Church and to the faithful. Pope Emeritus , Benedict XVI invites all families to pray the Rosary for the intentions of the Pope, the mission of the Church and peace. It is as if every year, he continues to write, our Lady invited us to rediscover the beauty of this prayer, so simple and profound. The Rosary, a contemplative and Christocentric prayer, inseparable from the meditations of the Sacred Scripture, is the prayer of Christians who advances in the pilgrimage of faith, in the following of Jesus, preceded by Mary.

These statements gain greater relevance today. The present Holy Father Francis is gathering an extraordinary synod of Bishops on October 5, 2014 in Rome on Family. In our diocese too we are celebrating the day of family on October 19, 2014 by honouring the couples who celebrate their Golden and Silver Jubilee of their Marriages. It is the Rosary that will bind and build this family Church. I encourage all our priests and religious and the faithful to attend and pray for our families. Further, we do celebrate the Mission Sunday in the month of October. It is not only the contribution of people that is important (though essential), but a greater consciousness and faith that every family must

become missionary in sprit and action. They must generously give their children both boys and girls as missionaries , at the service of the Church.

I take this opportunity to thank Fr. K.S.Gnana Jyoti and his collaborators for organizing a rally on Pro life at Tiruvannamalai. It was a fruit of hard work. The cooperation of all VFs, priests, religious communities and institutions are commendable and I thank them for their active collaboration and participation. It was a demonstration of our faith. Unfortunately we could not have it at Vellore as planned on September 27, 2014 due to the unexpected situation. I would like to thank both Fr. K.S.Gnana Jyoti and Fr. A.R. Antonysamy for their initiative and cooperation.

The diocese has taken its initiative with the cooperation of Vellore CRI to help people who are addicted to drinks. It seems this is another epidemic that destroys family fabric. They will chart out a programme and implement it. Further with the assistance of institutions of Higher Education a programme has been drawn up to give to all our young boys and girls a marriage course, thus preparing them for a proper family life. they will be issued a certificate which will be essential for their marriages.

On Sunday, October 5, 2014, all the members of Pious Association will gather at Madha Hill, Chetpet for a day of prayer and animation. I encourage everyone to participate and pray. I extend a special thanks to Fr. Kuriakose and office bearers of Pious Association.

Let us once again, every one of us , our families and our diocese entrust to Our Lady of Holy Rosary and pray that she will continue to bless with peace and strength of faith.

**+Most Rev. Dr.P.Soundararaju, SDB.,**
Bishop of Vellore

**Bishop's Programme**

| | | |
|---|---|---|
| 02 | Thu | Flag hoisting - Achirapakkam |
| 04 | Sat | Eucharistic Adoration - Cathedral, Vellore |
| 05 | Sun | Pious Association - Madha Hill, Chetpet |
| 06 | Mon | Madha Tv - Chennai |
| 10 | Fri | Flag hoisting - St.Luke's Church, Anna Nagar |
| 12 | Sun | Confirmation - Mosavadi |
| 13 | Mon | Sacred Heart Sisters - Rangapuram |
| 19 | Sun | Family Day |
| 20 | Mon | Recollection, Jubilee of our Priests |

**+ Most Rev. Dr. P. Soundararaju, SDB.,**
Bishop of Vellore

## VICAR GENERAL'S OFFICE

1. The concluding celebration of the Year of Family will be on Sunday 19 Oct. 2014 in our diocese. We will also keep the Jubilee celebration of our fathers on the following day 20 Oct. 2014. The time table will be :

**Sunday, 19 October**

| | | |
|---|---|---|
| 3:30 pm | - | Arrival and tea in 'Sangamam' |
| 4:00 pm | - | Talk |
| 5:00 pm | - | Honouring the Jubilee couples |
| 6:00 pm | - | Concelebrated Mass |

**Monday, 20 October**

| | | |
|---|---|---|
| 7:00 am | - | Morning prayer |
| 7:30 am | - | Photo with Jubilarians |
| 8:00 am | - | Breakfast |
| 9:00 am | - | Adoration and Confession |
| 10:00 am | - | Coffee |
| 10:30 am | - | Felicitation to the Jubilarians |
| 11:30 am | - | Mass with Jubilarians |
| 12:30 pm | - | Lunch |

2. Regarding the Jubilee couples and the people who are taking part in the celebration of the year of family, each parish priest is requested to make necessary

arrangements for their travel and food either by collecting money from them or asking them to take care by themselves. Hence I request all the parish priests your kind cooperation in this regard.

**Rev. Msgr. I. John Robert**
Vicar General

## கத்தோலிக்க மறைப்பணி நிலையம்

அன்பியம் வழிகாட்டிகளுக்கான கருத்தரங்கு

வேலூர் மறைக்கோட்ட அன்பிய வழிகாட்டிகளுக்கான ஒரு நாள் கருத்தரங்கானது 13.09.2014, சனி அன்று ஆயர் இல்லத்தில் நம் ஆயர் மேதகு முனைவர் பெ.சௌந்தரராஜு ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நம் மறைமாவட்ட முதன்மை தந்தை பேரருட்திரு. I.ஜான் ராபர்ட் அடிகளார் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக தமிழக ஆயர் பேரவையின் அன்பிய பணிக்குழுவின் செயலர் அருள்தந்தை காந்தி சவரிமுத்து வருகை புரிந்தார். செபவழிபாட்டோடு காலை 10 மணியளவில் கருத்தரங்கு தொடங்கியது. அன்பியத்தின் உயிர்நாடியான இறைவார்த்தை பவனியாக இறைப்புகழ் பாடி கொண்டுவரப்பட்டது. ஆயர் அவர்கள் அவற்றை எழுந்தேற்றம் செய்து, மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். பங்கேற்பாளர்கள் அனைவரும் எழுந்துநின்று வார்த்தையான இறைவனை போற்றி புகழ்ந்தனர்.

பிறகு, நம் மறைமாவட்டத்தில் அன்பியங்களின் செயல்பாடுகள் பற்றியும், அன்பியங்கள் தங்கள் வாழ்க்கையை எப்படி மாற்றியது போன்ற சாட்சியங்கள் அடங்கிய காணொளி (வீடியோ) திரையிடப்பட்டது. தொடர்ந்து மறைமாவட்ட அன்பிய பணிக்குழுவின் செயலரும், மேய்ப்பு பணி நிலைய

இயக்குனருமான அருள்தந்தை ஆரோக்கியா அவர்கள் அனைவரையும் வரவேற்று, மறைமாவட்டத்தில் அன்பியங்களின் செயல்பாடுகளையும், பங்கில் அன்பியங்களின் முக்கியத்துவத்தையும் விளக்கினார். அதைத் தொடர்ந்து ஆயர் அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார். அவர் உரையில் "அன்பியங்கள் இன்று வழக்கமாக செய்துவரும் சம்பிரதாய முறைகளை விட்டுவிட்டு, விசுவாசத்தை கட்டி எழுப்பும் செயல்பாடுகள் நிறைந்த தளமாக மாறவேண்டும். அது வெறுமனே செபவழிபாடுகள் செய்கின்ற இடமாகவோ அல்லது முதியவர்கள் பெண்கள் கூடுகின்ற இடமாகவோ மாறிவிடக்கூடாது. மாறாக ஆண்களும், இளைஞர்களும், சிறுவர்களும், எல்லா குடும்பங்களும் சேர்ந்து இறை அனுபவத்தை பெற்று அதன்படி வாழுகின்ற தளமாக மாறவேண்டும்" என்று வலியுறுத்தினார்.

தொடர்ந்து, தமிழக அன்பிய பணிக்குழுவின் செயலர் அருள்தந்தை காந்தி அவர்கள் , தமிழக அளவில் அன்பியங்களின் செயல்பாடுகள் பற்றியும் அன்பியங்கள் சந்திக்கின்ற சவால்களை பற்றியும் விளக்கமாகவும், ஆழமாகவும் எடுத்துரைத்தார்.

மதிய உணவு வேளைக்கு பிறகு வேதியர் சாமுவேல் அவர்கள் அன்பிய கூட்டம் நடத்தும் விதத்தை பற்றி விளக்கினார். அதன் பிறகு, பங்கேற்பாளர்கள் ஆறு குழுக்களாக பிரிக்கப்பட்டு மூன்று கேள்விகள் கொடுக்கப்பட்டு குழுவிவாதம் நடைப்பெற்றது. அவைகள் முறையே 1. பங்குகளில் அன்பியங்களின் செயல்பாடுகளை வரிசைப்படுத்துக. 2. அன்பியங்கள் இன்று சந்திக்கும் சாவல்கள் யாவை? அச்சவால்களுக்கு காரணங்களாக நீங்கள் கருதுபவை யாவை? 3. பங்கில் அன்பியங்களின் வளர்ச்சிக்கு உங்களது பரிந்துரைகள் யாவை? என்பதாகும். குழுவிவாதம் முடிந்து, ஒவ்வொரு குழுவின் செயலர்கள் தங்கள் குழுக்களில் விவாதிக்கப்பட்ட கருத்துக்களை அரங்கத்தில் சமர்ப்பித்தார்கள். தொடர்ந்து, விவாதிக்கப்பட்ட கருத்துக்கள் அடிப்படையில் பொது கேள்வி பதில் விவாதம் நடந்தது. இதன் மூலம் அனைத்து பங்கேற்பாளர்களும் மற்ற பங்குகளில் நடைபெறும் அன்பிய செயல்பாடுகள், சந்திக்கும் சவால்கள், தடைகள், அதை எதிர்நோக்கும்

வழிமுறைகள் நன்கு அறிந்து புரிந்துகொண்டனர். காலை 10 மணிமுதல் மாலை 5.30 வரை நடைபெற்ற இந்த கருத்தரங்கில் வேலூர் மறைக்கோட்டத்தை சார்ந்த பங்குகளிலிருந்து 193 பேர் பங்கேற்று பயன்அடைந்தார்கள்.

என்றும் அவர் பணியில்
அருள்தந்தை ஆரோக்கியா
செயலர், அன்பிய பணிக்குழு

## RCM SCHOOLS MANAGER'S OFFICE

**School visit September - 2014**

| S.No | Date | Name of the School |
|---|---|---|
| 46 | 11.09.2014 | RCM Primary School, Nessal |
| 47 | 11.09.2014 | RCM Primary School, Periakolapalur |
| 48 | 11.09.2014 | RCM Middle School, Mosavadi |
| 49 | 11.09.2014 | RCM Primary School, Periacolony – Vandavasi |
| 50 | 11.09.2014 | RCM Primary School, Padiri – Vandavasi |
| 51 | 11.09.2014 | RCM Primary School, Vandavasi |
| 52 | 12.09.2014 | RCM High School, Vandavasi |
| 53 | 12.09.2014 | RCM Primary School, Mazhuvankarunai |
| 54 | 12.09.2014 | RCM Primary School, Nelliankulam |
| 55 | 12.09.2014 | RCM Primary School, Nallur |
| 56 | 12.09.2014 | RCM Primary School, Theresapuram |
| 57 | 12.09.2014 | RCM Primary School, Japthikarani |

(Total Schools 46 to 57)

**Fr. A.C.Savarimuthu,**
Manager, R.C.M. Schools.

# VELLORE SOCIAL SERVICE SOCIETY

மக்கள் நல்வாழ்வு மையம் திறப்பு

24.08.2014 ஞாயிறு அன்று காலை 10.30 மணியளவில் வேலூர் சமூக சேவை சங்கத்தின் வழியாக சத்துவாச்சாரி அன்னை திரேசா முதல் தெருவில் கட்டி எழுப்பப்பட்ட மக்கள் நல்வாழ்வு மையத்தையும், கிறிஸ்து அரசர் கருத்தரங்கு கூடத்தையும் நம் பாசமிகு ஆயர் டாக்டர் P.சௌந்தரராஜு அவர்கள் புனிதப்படுத்தி, திறந்து வைத்தார்கள். புனித அந்தோணியார் பெயரில் 7 அறைகளை முதன்மைகுரு பேரருட்திரு. I.ஜான்ராபர்ட் அவர்களும் அடால்ப் கோல்பிங் பெயர்கொண்ட 7 அறைகளை கோல்பிங் தேசிய இயக்குனர் பேரருட்திரு. அந்தோணிராஜ் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

மாற்றுத்திறனாளிகள், உடல் நலிவுற்றோர், வாழ்வியல் வளர்ச்சிக்கு திறன்வளர்ப்பு பயிற்சிகள், சுயதிட்டங்களால் முழுமனித விடியல் காண மக்கள் நல்வாழ்வு மையத்தை நம் ஆயர் அவர்கள் அர்ப்பணித்துள்ளார்.

அதன்பின் நடைபெற்ற சிறப்பு கூடத்தில் மக்கள் நல்வாழ்வு மையத்தை கட்டி எழுப்பிய வேலூர் சமூக சேவை சங்க இயக்குனர் பேரருட்திரு. A.R.அந்தோணிசாமி அவர்களை நம் பாசமிகு ஆயர் அவர்களின் தலைமை உரையில் வாழ்த்தி பாராட்டினார்கள். முதன்மை குரு, கோல்பிங் இயக்குநர். திருவண்ணாமலை சமூக சேவை சங்க இயக்குநர் பேரருட்திரு. ஞானஜோதி ஆகியோர் சிறப்புரை வழங்கி அனைவரையும் வாழ்த்தினார்கள். கட்டிட பணிக்காக உழைத்த உழைப்பாளர்கள் அனைவருக்கும் அன்பு ஆயர் அவர்கள் ஆசீர் வழங்கி, பரிசு பொருட்கள் கொடுத்து பாராட்டினார்கள். திட்ட மேலாளர் திரு. பேட்ரிக் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். விழா நிகழ்ச்சி இறுதியில் திரு. இராஸ் லூயிஸ் அவர்கள் விழாவில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், மறைமாவட்ட பெண்கள் பணிக்குழு பிரதிநிதிகள், மகளிர், கோல்பிங், விவசாய அமைப்புகளைச் சார்ந்த உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகிய 500க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்கள்.

இயற்கை சூழலை பாதுகாக்கும் வகையில் பசும்புல் தரை, மலர்செடிகள், எழில்மிகு வண்ணங்கள் அனைவரின் எண்ணங்களுக்கும், மனங்களுக்கும் கண்கொள்ளா காட்சியாக மக்கள் நல்வாழ்வு மையம் அமைந்தது .

09.09.2014 செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் 3 மணியளவில் இயக்குநர் பேரருட்திரு. A.R.அந்தோணிசாமி அவர்கள் தலைமையில் உயிர்களை சிதைக்கும், அழிக்கும் கருச்சிதைவு, போர், பசிப்பிணி, முதியோர்வதை இவைகளை அழிப்போம், உயிர் காப்போம் என்ற தலைப்பில் மாபெரும் விழிப்புணர்வு பேரணி 27.09.2014 அன்று நடத்த திட்டமிடப்பட்டது. இப்பேரணியில் ஆயர் டாக்டர் P.சௌந்தரராஜு அவர்கள் தலைமை தாங்கவும் வேலூர் VIT வேந்தர் திருமிகு. G.விஸ்வநாதன் அவர்கள் கொடி அசைத்து துவக்கவும், முதன்மை குரு பேரருட்திரு. I.ஜான்ராபர்ட் முன்னுரை வழங்கவும், பேரருட்திரு. K.S.ஞானஜோதி, பேரருட்திரு. A.ஜான் பேப்டிஸ்ட், பேரருட்திரு. V.செபாஸ்டின், திருமதி. மில்காமேரிகலா ஆகியோர் பரப்பல் உரைகளை நிகழ்த்தவும், பங்கேற்பாளர்கள் அனைவரும் பதாகைகள், கொண்டு வரவும் முழக்கமிடவும் திட்டமிடப்பட்டது. திட்டமிட்ட நாள் முதல் 22.09.2014 வரை மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோருடைய அனுமதியும், அனைத்து பங்குகளிலும், பங்கு தந்தையர்களையும், நிறுவனங்களின் முதன்மை தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றுமுள்ள பொறுப்பாளர்களையும் சந்தித்து ஒத்துழைப்பு தரும்படியும், செய்திகளும், நோட்டீசுகளும் வழங்கப்பட்டன. இன்றுவரையில் அனைத்து பங்குகளிலும் ஞாயிறு திருப்பலிகளில் செய்திகள், நோட்டீசுகள் வழங்கப்பட்டன, பங்கு தளங்களிலுள்ள மகளிர் அமைப்பு, கோல்பிங் இயக்கம், பெண்கள் பணிக்குழு, விவசாய சங்கம், ஆகியவைகளுக்கு ''உயிர் காப்போம்'' என்ற விழிப்புணர்வு செய்தியும்,

5,000 நோட்டீசுகளும் வழங்கப்பட்டன. மறைமாவட்டத்தில் குடும்ப ஆண்டின் நிறைவாக Pro-life உயிர் காப்போம் என்ற செய்தி பரவலாக்கப்பட்டன. ஆனால் தவிர்க்கமுடியாத சூழ்நிலையால் நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது.

அருட்திரு. A.R.அந்தோணிசாமி
இயக்குநர்,
வேலூர் சமூக சேவை சங்கம்

## கோல்பிங் இந்தியா / வேலூர் மறைமாவட்டம்

03.09.2014 புதன்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் திருவண்ணாமலை சமூக சேவை சங்க கருத்தரங்கு கூடத்தில் "இயற்கை வேளாண்மையும் தொழில்நுட்ப பயிற்சியும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. VSSS இயக்குநர் பேரருட்திரு. A.R.அந்தோணிசாமி அவர்கள் "ஏன் வேண்டும் இயற்கை வேளாண்மை" என்ற தலைப்பில் பூமி வளமானதாக இருக்க மண்வளத்தை காக்கவேண்டும் என்றும், இயற்கை விவசாயத்தை செயல்படுத்த வேண்டும் என்றும் கருத்துரை வழங்கினார். திருவண்ணாமலை NCD தொண்டு நிறுவனத்திலிருந்து திரு. சேகர் அவர்கள் "மண் மாசுபடுவதை தவிர்க்க வேண்டும் என்றும், இயற்கை உரம் தயாரித்தல், பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்தல்" பற்றி சிறப்பாக பயிற்சி கொடுத்தார். திட்ட மேலாளர் திரு. பேட்ரிக் அவர்கள் "அரசு, அரசுசாரா நிறுவனங்கள், பஞ்சாயத்துராஜ் திட்டங்கள்" என்ற தலைப்பில் விளக்கம் அளித்தார். இக்கருத்தரங்கில் ஆவூர், வேட்டவலம், அல்லிகொண்டாப்பட்டு, இளையாங்கண்ணி, தானிப்பாடி, தண்டராம்பட்டு ஆகிய கிளை கோல்பிங் குடும்பங்களிலிருந்து 30 உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர். இந்நிகழ்ச்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ஜார்ஜ் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

10.09.2014 புதன்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் வேலூர் சமூக சேவை சங்க கருத்தரங்கு கூடத்தில் புதிய குழுக்களுக்கான தலைமை பண்புகள் பற்றிய பயிற்சி இயக்குநர் பேரருட்திரு. A.R.அந்தோணிசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் இயக்குநர் அவர்கள் ''தலைமைத்துவ பயிற்சியில் குழுவை வழிநடத்துகின்ற தலைவர்கள் விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை'' ஆகிய பண்புகளை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என கருத்துரை வழங்கினார்கள். திட்ட மேலாளர் திரு. பேட்ரிக் அவர்கள் ''தலைமைத்துவத்தின் வகைகள், குணநலன்கள்'' பற்றி தெளிவுப்படுத்தினார். இக்கருத்தரங்கில் அரக்கோணம் கிளை பங்கிலிருந்து புன்னை, இச்சிபுத்தூர், உள்ளியம்பாக்கம் மற்றும் மருத்துவம்பாடி, சோமாஸ்பாடி ஆகிய கிளை கோல்பிங் குடும்பத்திலிருந்து 30 உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இந்நிகழ்ச்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ஜார்ஜ் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

செய்தி தொகுப்பு

திரு. V.S.ஜார்ஜ்
ஒருங்கிணைப்பாளர்

அருட்திரு. A.R.அந்தோணிசாமி
இயக்குநர்

## THIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

3.9.2014 திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் பணியாளர்களுக்கான மாதாந்திர கூட்டம் திருப்பலியுடன் தொடங்கியது. பணியாளர்களின் செயல்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. சுழல்நிதி கடன்களை விரைவில் வசூலிக்க அறிவுறுத்தப்பட்டது.

10.9.2014, 13.9.2014 மற்றும் 14.9.2014, 18.9.2014 ஆகிய தேதிகளில் தானிப்பாடி, செய்யாறு, கீழ்பென்னாத்தூர், தண்டராம்பட்டு ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் அமைப்பு உறுப்பினர்களுக்கு திருவண்ணாமலை மாவட்ட காசநோய் தடுப்பு மையத்தின் சார்பிலும், ரீச் நிறுவனத்தின் சார்பிலும் காசநோய் பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இதில் மக்கள் அமைப்பு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

மேற்காணும் யூனியன் கூட்டங்களில் மக்கள் அமைப்பு உறுப்பினர்களும் திட்ட பணியாளர்களும் கலந்துகொண்டனர்.

## சிறப்பு செயல்பாடுகள்

கருச்சிதைவு, போர், பசிப்பிணியிலிருந்து மனித உயிர்களை காக்க மாபெரும் விழிப்புணர்வு பேரணி மற்றும் நற்கருணை மாநாடு

உலகளவில் நடந்துவரும் கருச்சிதைவு, போர்கள், பசிப்பிணி போன்றவற்றிலிருந்து மனித உயிர்களைக் காக்க மாபெரும் விழிப்புணர்வு பேரணியானது 6.9.2014 சனிக்கிழமை அன்று திருவண்ணாமலையில் நடைபெற்றது. இப்பேரணியை வேலூர் மறைமாவட்ட ஆயர் முனைவர் பெ.சௌந்தரராஜு அவர்கள் தலைமை தாங்கி ஆசியுரை வழங்கி தொடங்கி வைத்தார். வேலூர் மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை முனைவர் I.ஜான்ராபர்ட் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். திருவண்ணாமலை காவல்துறை கண்காணிப்பாளர் திருமிகு. அன்பழகன் அவர்கள் இப்பேரணியை முன்னிலை வகித்து துவக்கி வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்ட சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருள்தந்தை K.S.ஞானஜோதி அவர்கள் இப்பேரணியை பொறுப்பேற்று நடத்தினார். இப்பேரணி உலகமாதா ஆலயத்தை அடைந்தது. பிறகு நற்கருணை ஸ்தாபகம் செய்யப்பட்டு மக்கள் இப்பேரணியின் மையக் கருத்துக்காக செபித்தார்கள். திருமதி. கிப்தா மனோகரி உயிர்களின் மேன்மையைப் பற்றி சிறப்பாக எடுத்துரைத்தார்கள். அருட்தந்தை அக்டோவியஸ் அவர்கள் "நற்கருணைதான் உயிர்களின் ஊற்று" என்று மறையுரை ஆற்றினார்கள். திருவண்ணாமலை மறைகோட்ட முதன்மை தந்தை அருட்திரு. பிரான்சிஸ் சேவியர் அவர்கள் சிறப்பு செபம் சொல்ல வேலூர் மறைமாவட்ட முதன்மைகுரு பேரருட்திரு. ஜான் ராபர்ட் அவர்கள் இறுதி நற்கருணை ஆசீர் கொடுத்து நற்கருணை மாநாட்டை முடிவுக்கு கொண்டு வந்தார்கள். இம்மாபெரும் பேரணியிலும், நற்கருணை மாநாட்டிலும் கலந்துகொண்ட அனைத்து அருட்தந்தையர்கள், துறவறத்தார்,

இளைஞர்கள், இறைமக்கள் அனைவருக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

செய்தி தொகுப்பு

| | |
|---|---|
| திரு. லூ.தாமஸ் இன்பசேகர், | அருட்பணி. K.S.ஞானஜோதி, |
| திட்ட அலுவலர் | இயக்குநர் |

## NATIONAL ASSEMBLY

On 18 and 19 September the National Assembly conducted by Caritas India for all the Diocesan Directors of Social Apostolate was held at St.John's Medical College, Annex-3, Bangalore. The theme was "Towards 2nd Generation Animation". 160 members participated in the National Assembly. From our Diocese Rev. Fr. A.R.Antony Samy, VSSS Director and Rev. Fr.K.S.Gnana Jyoti, TVMSSS Director participated. It was very useful and effective.

On 23 September we had the Executive body meeting at TASOSS, Trichy. We discussed about the TASOSS perspective plan 2014. Two books were released and given to the participants. Rev.Fr.A.R.Antony Samy and Fr. K.S.Gnana Jyoti participated in the meeting.

**Fr. K.S.Gnana Jyoti**

Director, TVMSSS

## Krupalaya – Link Worker Scheme ( Supported by TANSACS)

16.07.2014, 18.07.2014, 24.07.2014, 25.07.2014 மற்றும் 28.07.2014 ஆகிய தேதிகளில் கிருபாலையா தொண்டு நிறுவனத்தின் சார்பில்

தண்டராம்பட்டு PHC புதுபாளையம், சின்னியம்பேட்டை, தண்டராம்பட்டு மற்றும் வீரணம் ஆகிய கிராமங்களில் Advocacy Meeting நடைபெற்றது. இதில் அரசுபணியில் உள்ளவர்கள், உறுப்பினர்கள் மற்றும் கிராம பெரியவர்கள், கலந்துகொண்டார்கள். இதில் HIV/AIDS, பால்வினைநோய் மற்றும் காசநோய் பற்றிய விழிப்புணர்வு பயிற்சியும் கலந்துரையாடலும் நடைப்பெற்றன.

12.07.2014 அன்று RRC Event நடைபெற்றது. இதில் அண்டம்பள்ளம், சின்னகளாப்பாடி, பெருமணம், ஆடையூர், தச்சாம்பட்டு மற்றும் ஆருதிராப்பட்டு ஆகிய கிராமங்களில் இருந்து நபர்கள் கலந்துகொண்டனர். அவர்களுக்கு HIV/AIDS பால்வினைநோய் மற்றும் காசநோய் பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது. பங்கேற்றவர்களுக்கு கைபந்து போட்டி நடத்தப்பட்டு திரு. சந்திரன் (கூட்டுறவு தலைவர்) தலைமையில் பரிசுகள் வழங்கப்பட்டன.

16.07.2014 மற்றும் 28.07.2014 ஆகிய தேதிகளில் மேல்பள்ளிப்பட்டு மற்றும் கல்லாங்குத்து கிராமங்களில் Local Body கூட்டம் நடைபெற்றது. இதில் PRI உறுப்பினர்கள் மற்றும் ஊர் பெரியவர்கள் கலந்துகொண்டார்கள். இதில் HIV/AIDS பால்வினைநோய் மற்றும் காசநோய் பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

19.07.2014 அன்று செங்கம், திருவண்ணாமலைமற்றும் சேத்துப்பட்டு பகுதிகளில் HIV/AIDS ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது. அனைவரும் கூட்டுமருந்து சிகிச்சையை தொடர்ந்து எடுக்கவேண்டும் என்றும் திருவண்ணாமலை மாவட்ட சங்கத்தில் சேரவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

24.07.2014 மற்றும் 25.07.2014 ஆகிய தேதிகளில் கொட்டையூர் மற்றும் கொவளை ஆகிய கிராமங்களில் பதிய சிகப்பு நாடாக்குழு அமைக்கப்பட்டது.

அவர்களுக்கு பால்வினைநோய் மற்றும் காசநோய் ஆகியவை பற்றிய முழு தகவல்கள் அளிக்கப்பட்டன. அனைவரும் தங்கள் கிராமங்களில் “புதிய தொற்றில்லா தமிழகத்தை உருவாக்க” கிருபாலையா தொண்டு நிறுவனத்துடன் இணைந்து செயல்படுவோம் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

05.07.2014, 12.07.2014, 19.07.2014 மற்றும் 26.07.2014 ஆகிய தேதிகளில் கிருபாலையா தொண்டு நிறுவனத்தின் பணியாளர்களுக்கான வாராந்திர ஆய்வு கூட்டங்கள் நடைபெற்றன. இதில் லிங்க் ஒர்க்கர்களின் செயல்பாடுகள் குறித்து விளக்கமாக விவாதிக்கப்பட்டது.

30.08.2014 அன்று கிருபாலையா தொண்டு நிறுவனத்தின் பணியாளர்களுக்கான மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. அதில் பணியாளர்களின் செயல்பாடுகள் பற்றி பகுதிவாரியாக விவாதிக்கப்பட்டது.

06.08.2014 மற்றும் 08.08.2014 ஆகிய தேதிகளில் கிருபாலையா தொண்டு நிறுவனத்தின் சார்பில் சின்னியம்பேட்டை மற்றும் தெள்ளார் ஆகிய கிராமங்களில் Advocacy Meeting நடைபெற்றது. இதில் அரசு பணியில் உள்ளவர்கள், PRI உறுப்பினர்கள், கிராம பெரியவர்கள் மற்றும் ஊர் பெரியவர்கள் கலந்துகொண்டார்கள். இதில் HIV / AIDS பால்வினைநோய் மற்றும் காசநோய் பற்றிய விழிப்புணர்வும் கலந்துரையாடலும் நடைபெற்றது.
09.08.2014, 16.08.2014 மற்றும் 23.08.2014 ஆகிய தேதிகளில் கிருபாலையா தொண்டு நிறுவனத்தின் பணியாளர்களுக்கான வாராந்திர ஆய்வு கூட்டங்கள் நடைபெற்றன. இதில் லிங்க் ஒர்க்கர்களின் செயல்பாடுகள் குறித்து விளக்கமாக விவாதிக்கப்பட்டது.

12.08.2014 அன்று கிருபாலயா லிங்க் ஒர்க்கர் திட்டம் சார்பில் எய்ட்ஸ் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி தொடக்க விழா நடைபெற்றது. இதை திருவண்ணாமலை சுகாதாரப் பணிகள் துணை இயக்குனர் ஜெயந்தி

தொடங்கி வைத்தார். Dr. ஹரிராஜ் (DPM) Sr. ஜுலியட், csst, திரு. ஜான் பீட்டர் மற்றும் பலர் கலந்துகொண்டனர். 12.08.2014 முதல் 23.08.2014 வரை வேடந்தவாடி, மேக்களூர், அண்டம்பள்ளம், ஜமின்கூடலூர், பெருமணம், அரடாபட்டு, கொட்டையூர், அகரம்பள்ளிப்பட்டு, தென்முடியனூர், மளமஞ்சனூர் புதூர், ராதாபுரம், கீழ்சிறுபாக்கம், காரப்பட்டு, காயம்பட்டு, குப்பநத்தம், பரமனந்தல், மேல்வணக்கம்பாடி, கரியமங்களம், குப்பம், படவேடு, மாம்பட்டு, பொன்னூர், கல்லாங்குத்து, கீழ்கொடுங்கானூர் ஆகிய கிராமங்களில் HIV/AIDS பால்வினைநோயின் அறிகுறிகள், பால்வினை நோய்க்கு துறைவருடன் கூடிய சிகிச்சை மற்றும் ஆணுறையின் அவசியம் பற்றி நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் மூலம் பீம் வெற்றி கலைக்குழுவினர் நடத்தினார்கள். இதன் மூலம் 458 பேருக்கு இலவச இரத்த பரிசோதனைகள் நடைபெற்றது.

21.08.2014 முதல் 23.08.2014 வரை PTANSACS மூலம் மாவட்ட வள அதிகாரி, கணக்காளர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு புதிதாக பயிற்சி திருச்சியில் நடைபெற்றது.

திருவண்ணாமலை கிரிவலம் சுற்றும் பாதையில் GH சுற்றுசுவர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சுற்றுசுவர், ஆனைபிறந்தான் ஊராட்சிக்கு உட்பட்ட 2 இடங்கள், அடி அண்ணாமலை ஊராட்சிக்கு உட்பட்ட இடம் மற்றும் மத்திய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் HIV/AIDS விழிப்புணர்வு சுவர் விளம்பரங்கள் எழுதப்பட்டன.

மேற்கண்ட அனைத்து நிகழ்வுகளிலும் கிருபாலையா தொண்டு நிறுவனத்தின் சார்பில் 40 லிங்க் ஒர்க்கர்கள், 4 மேற்பார்வையாளர்கள், கணக்காளர், திரு. ஜான் பீட்டர் மற்றும் ஜுலியட் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

செய்தி தொகுப்பு

திரு. சி.ஜான் பீட்டர்
மாவட்ட வள அதிகாரி
லிங்க் ஒர்க்கர் திட்டம்

சகோ. ஜுலியட்
திட்ட இயக்குநர்
லிங்க் ஒர்க்கர் திட்டம்

## மரியாயின் சேனை

வேலூர் கொமித்சிய பொறுப்பாளர்கள் பதவி காலம் முடிவடைந்ததையொட்டி அருட்பணி. குரியகோஸ் காரிகாட், (ஜுலை மாதம் 2014 அன்று) மறைமாவட்ட பக்த சபைகளின் இயக்குநர் அவர்கள் முன்னிலையில் தேர்வு நடைபெற்றது. அதில் மீண்டும் சகோதரி. ரத்னாமேரி தலைவியாகவும், சகோதரர் மைக்கேல் முருகேசன் துணைத் தலைவராகவும், சகோதரர் சூசை பொருளராகவும், சகோதரி ஆரோக்கியமேரி செயலராகவும் தேர்வு செய்யப்பட்டார்கள்.

சகோதரி ரத்னாமேரி
கொமித்சிய தலைவர், வேலூர்.

### Birthday

| | |
|---|---|
| Rev. Fr. S. Lazar Savarimuthu | 02.10.1951 |
| Rev. Fr. D. Arockiasamy | 06.10.1978 |
| Rev. Fr. A. Joseph | 07.10.1972 |
| Rev. Fr. John Valarkott | 10.10.1932 |
| Rev. Fr. A. Maria Michael | 12.10.1944 |
| Rev. Fr. P. Albin Justus | 14.10.1953 |
| Rev. Fr. P. Leo Maria Joseph | 15.10. 1980 |
| Rev. Fr. K. P. Kurian | 17.10.1932 |
| Rev. Fr. P. Alexander | 24.10.1967 |
| Rev. Fr. S. Paularasu | 28.10.1977 |

### Ordination day

| | |
|---|---|
| Rev. Fr. R. Fathimanathan | 13.10.1980 |
| Rev. Fr. M. Sebastian | 13.10.1980 |

## Intentions

Let us pray that the Lord may grant peace to those parts of the world most battered by war and violence.

Let us pray that World Mission Day may rekindle in every believer zeal for carrying the Gospel into all the world.

## Calender

| | | |
|---|---|---|
| 01 | Wed | St.Therese of the Child Jesus Virg., Mem |
| 02 | Thu | The Guardian Angels Mem |
| 04 | Sat | St.Francis of Assisi Mem |
| **05** | **Sun** | **27th Ordianary Sunday** |
| 07 | Tue | Our Lady Of the rosary Mem |
| **12** | **Sun** | **28th Ordinary Sunday** |
| 15 | Wed | St.Teresa of Avila Virg., Dr., Mem |
| 17 | Fri | St.Ignatius of Antioch Bp., M. Mem |
| 18 | Sat | St.Luke Evan., Feast |
| **19** | **Sun** | **29th Ordinary Sunday Mission Sunday** |
| 20 | Mon | St.Paul of the Cross Pr. |
| **26** | **Sun** | **30th Ordinary Sunday** |
| 28 | Tue | Ss. Simon and Jude, APP |

## Necrology

| | |
|---|---|
| Rev. Fr. Joseph Parampet | 01.10.1989 |
| Rev. Fr. P. K. Antony SDB | 02.10.1983 |
| Rev. Fr. J. Martin SDB | 03.10.1986 |
| Rev. Fr. V. P. Antony Samy | 03.10.2000 |

| | |
|---|---|
| Rev. Fr. A. Devadoss | 04.10.1989 |
| Rev. Fr. Edward Giterrez SDB | 08.10.1976 |
| Rev. Fr. Maggioni SDB | 21.10.1983 |
| Rev. Fr. Mary Sochi SDB | 24.10.1974 |
| Rev. Fr. Henry Remeri SDB | 24.10.2000 |
| Rev. Fr. G. Antony Adimai | 24.10.2010 |
| Rev. Msgr. Menezes | 26.10.1994 |
| Rev. Fr. Varghees SDB | 27.10.1983 |
| Rev. Fr. Jose M. Lawrence | 27.10.2003 |
| Rev. Bro. Xavier Savarimuthu SDB | 28.10.1967 |

**R.I.P**

In your charity please pray for the repose of the soul of Mr. G.Savarimuthu, beloved father of Rev. Fr. S.Arulappan, who passed away on 08.09.2014. May his soul rest in peace.

In your charity please pray for the repose of the soul of Rev. Fr.A.Joseph (Senior) who passed away on 21.09.2014. May his soul rest in peace.